# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 04 புதன்கிழமை 18.06.2025 கதிர் 229







# வலிகாமம் கிழக்கு பிரதேச சபை 'சங்கு' வசம்!

## தவிசாளராகத் தியாகராஜா நிரோஷ் தெரிவு






கோப்பாய், ஜூன் 18

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் புதிய தவிசாளராக பரபரப்பான முத்தரப்புப் போட்டியில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி மற்றும் தமிழ்த் தேசியப் பேரவையின் வேட்பாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவானார்.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் மற்றும் உப தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் இன்று வலிகாமம் கிழக்கு பிரதேச சபை சபா மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் 7 ➤

### வடக்கில் மனிதப் புதைகுழிகள் வதந்தியா?

# இதுவரை காலமும் தூக்கத்தில் இருந்தாரா நீதி அமைச்சர் ஹர்ஷன?

## சஜித் அணி சீற்றத்துடன் கேள்வி



கொழும்பு, ஜூன் 18

"வடக்கில் பல மனிதப் புதை குழிகள் வதந்திகள் என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளமையைக் கடுமை யாகக் கண்டிக்கின்றோம். அவர் இதுவரை காலமும் தூக் கத்தில் இருந்தாரா?" - என்று கேள்வி எழுப்பினார் ஐக்கிய மக் கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப் பினர் கயந்த கருணாதிலக. 7 ➤

# வலிகாமம் வடக்கு பிரதேச சபை மீண்டும் தமிழரசுக் கட்சி வசம்!

## தவிசாளராக சோமசுந்தரம் சுகிர்தன் தெரிவு



வலிகாமம் வடக்கு, ஜூன் 18

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த சோமசுந்தரம் சுகிர்தன் தெரிவானார்.

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உப தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் இன்று வலிகாமம் வடக்கு பிரதேச சபை சபா மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

35 உறுப்பினர்களைக் கொண்ட வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்காக நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி 11 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி 9 ஆசனங்களையும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் 6 ஆசனங்களையும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி மற்றும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஆகியன தலா 3 ஆசனங்களையும், ஐக்கிய மக்கள் சக்தி 2 ஆசனங்களையும், தமிழ் மக்கள் கூட்டணி ஓர் ஆசனத்தையும் கைப்பற்றியிருந்தன.

தவிசாளர் பதவிக்காக இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட சோமசுந்தரம் சுகிர்தன் 14 வாக்குகளையும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட பத்மநாதன் சாருஜன் 9 வாக்குகளையும் பெற்றனர்.

உப தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த பொன்னுத்துரை தங்கராசா தெரிவானார்.

# காலையில் கைதான கெஹலிய குடும்பம் மாலையில் விடுவிப்பு



கொழும்பு, ஜூன் 18

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் இன்று காலை கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் 7 ➤



### தமிழினத் துரோகிகளுடன் கூட்டு:

# யாழில் நரித்தனமான அரசியல் முன்னெடுப்பு

## சபையில் தமிழரசைச் சாடிய அமைச்சர்

கொழும்பு, ஜூன் 18

"முள்ளிவாய்க்கால் பேரவலத்தை அரங்கேற்றிய தரப்புகளுடன் இணைந்து - அந்த அழிவை ஆதரித்த டக்ளஸ் தேவானந்தா போன்றவர்களுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சியமைக்கும் 7 ➤






# வல்வெட்டித்துறை நகர சபையை கைப்பற்றியது தமிழ்க் காங்கிரஸ்

## நகர பிதாவாக தவமலர் சுரேந்திரநாதன் தெரிவு

வல்வெட்டித்துறை, ஜூன் 18

வல்வெட்டித்துறை நகர சபையின் புதிய நகர பிதாவாக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸைச் சேர்ந்த திருமதி. தவமலர் சுரேந்திரநாதன் தெரிவானார்.

வல்வெட்டித்துறை நகர சபையின் நகர பிதா, துணை நகர பிதா ஆகியோரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் இன்று 7 ➤

# கொழும்பு நகரத்தை உலகின் மிகவும் வளர்ந்த நகரங்களில் ஒன்றாக மாற்ற வேண்டும்– கொழும்பு மாநகர சபை மேஜர்!

கொழும்பு, ஜூன் 18

கொழும்பு மாநகர சபையின் மேயராகத் தான் தெரிவு செய்யப்பட்டமையை தனிப்பட்ட வெற்றியாக எடுத்துக்கொள்ள போவதில்லை என்றும், தனது வெற்றி ஒரு கூட்டு முயற்சியின் விளைவாகும் என்றும் கொழும்பு மாநகர சபையின் மேயர் வ்ராய் கெலி பல்தசார் தெரிவித்துள்ளார்.

இன்று (18) காலை கொழும்பு மேஜருக்கான பதவியேற்பு விழா இடம்பெற்ற போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இந்த நகரத்தையும் மாற்றுவோம்” என்று குடிமக்கள் குரல் எழுப்பியதாக குறிப்பிட்ட மேயர், இந்த நகரத்தை மாற்ற வேண்டிய பொறுப்பு நமக்கு உள்ளது என்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது குறிப்பிட்டார்.

கொழும்பு இலங்கையின் பணக்கார நகரமாக இருந்தாலும், அதன் இருண்ட பக்கம் இப்போது கொழும்பை மூழ்கடித்துள்ளதாக கூறிய அவர், நகரத்தில் வாழும் மக்களுக்கு வெளிச்சம் வழங்குவதில் தனக்கு மிகப்பெரிய பங்கு இருப்பதாகவும் தெரிவித்தார்.

ஒழுங்கற்ற திட்டங்கள் காரணமாக கொழும்பில் பல பெரிய பிரச்சினைகள் இருப்பதாகவும், அவை அனைத்தும் தீர்க்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

கொழும்பு நகரத்தை உலகின் மிகவும் வளர்ந்த நகரங்களில் ஒன்றாக மாற்ற வேண்டும் என்றும், கட்சி அல்லது நிற வேறுபாடின்றி 117 உறுப்பினர்களின் கூட்டுப் பணியிலேயே வெற்றி அடங்கியுள்ளது என்றும், இதற்கு ஆதரவளிக்குமாறும் கொழும்பு மேயர் கேட்டுக் கொண்டார்.

## பீப்பாய்கள் மற்றும் கேன்களில் எரிபொருள் வழங்க தடை!

பீப்பாய்கள் மற்றும் கேன்களில் எரிபொருள் வழங்கும் செயற்பாடு உடனடியாக நிறுத்தப்பட்டுள்ளதாக இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

எரிபொருளை பீப்பாய்கள் மற்றும் கேன்களில் பெறும் பொருட்டு நுகர்வோர் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தேவையற்ற விதத்தில் கூடி வரிசைகளை உருவாக்குவதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி பீப்பாய்கள் மற்றும் கேன்களில் எரிபொருளை வழங்க வேண்டாம் என எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமையாளர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு மாறாகச் செயல்பட்டால், கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

மேலும் போதுமானளவு எரிபொருள் உள்ள போதும், நுகர்வோர் தேவையற்ற அச்சம் காரணமாக எரிபொருள் நிலையங்களில் நீண்டவரிசையில் காத்திருப்பதாகவும், பீப்பாய்கள் மற்றும் கேன்களில் எரிபொருளை பெறும் செயற்பாட்டில் ஈடுபடுவதாகவும் தெரிவித்த இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனம், நுகர்வோரின் இவ்வாறான நடவடிக்கையினாலேயே பீப்பாய்கள் மற்றும் கேன்களில் எரிபொருள் வழங்குவது உடனடியாக தடை செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது

## வீதியில் நித்திரை: வாகனம் ஏறியதில் இளைஞன் பலி

மட்டக்களப்பு, ஜூன் 18

வீதியில் நித்திரை செய்த ஒருவர் மீது வாகன ஏறியதில் இளைஞன் ஒருவர் உயிரிழந்தார். அவருக்கு அருகில் நித்திரை செய்தவர் தெய்வாதீனமாக உயிர் தப்பிய சம்பவம் செவ்வாய்க்கிழமை அதிகாலையில் இடம்பெற்றது. இளைஞன் மீது ஏற்றிய வாகனம் தப்பி ஓடியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம், மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள பதுளை வீதியில் உள்ள தும்பாஞ்சோலை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மண்டூர் சின்னவத்தையைச் சேர்ந்த 25 வயதுடைய செல்வம் சாந்தன் செல்லையா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

செங்கலடி பதுளை வீதியில் உள்ள கரடியனாறு தும்பாஞ்சோலை பகுதியில் உள்ள வீதிக்கு அருகில் உள்ள வேளாண்மை காவலுக்காக குறித்த இளைஞர் உட்பட இருவர் திங்கட்கிழமை இரவு சென்று அங்கு வீதி ஓரத்தில் நித்திரை செய்துள்ளனர்.

இந்த நிலையில் சம்பவதினமான செவ்வாய்க்கிழமை (18) அதிகாலை 1.30 மணியளவில் வீதியோரத்தில் நித்திரை செய்த இளைஞன் மீது வீதியால் சென்ற வாகனம் ஏறிச் சென்றதையடுத்து அவர் படுகாயமடைந்த நிலையில் வீதியில் கிடப்பதை கண்டு அவரை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர். எனினும், அவர் செல்லும் வழியில் உயிரிழந்தார்.

அதேவேளை இளைஞனுடன் நித்திரை செய்தவர் தெய்வாதீனமாக தப்பியுள்ளதுடன் அவர் கண்விழித்த போது இளைஞனுக்கு என்ன நடந்தது என தெரியாத நிலையில் இருந்துள்ளதுடன் மதுபானம் அருந்திவிட்டு வீதியில் நித்திரை செய்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதேவேளை குறித்த சடலத்தை பிரேத பரிசோதனை மேற்கொண்ட போது தலையில் வாகனத்தின் டயர் ஏறியதால் உயிரிழந்துள்ளதாக சட்ட வைத்திய அதிகாரிகள் கண்டறிந்துள்ளார். இதையடுத்து இளைஞன் மீது வாகனத்தை ஏற்றி விட்டு தப்பி ஓடிய வாகனத்தை கண்டு பிடிப்பதற்கான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியனாறு போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# நுவரெலியா பிரதேச சபையை கைப்பற்றியது இ.தொ.கா. கட்சி

நுவரெலியா, ஜூன் 18

நுவரெலியா பிரதேச சபையை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி கைப்பற்றியுள்ளது.

நுவரெலியா பிரதேச சபைக்குத் தெரிவான உறுப்பினர்களின் தவிசாளர், உப தவிசாளர் தெரிவு இன்று நண்பகல் 12 மணியளவில் நுவரெலியா பிரதேச சபை கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர் வேலு யோகராஜ், பகிரங்க வாக்கெடுப்பு மூலம் பிரதேச சபையின் புதிய தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார், அதேநேரத்தில் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஹேவகே ஆஷா தில்ருக்ஷி பொன்சேகா சபையின் உப தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நுவரெலியா பிரதேச சபைக்கான தவிசாளர் மற்றும் உப தவிசாளர் ஆகிய தெரிவுகள் மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் ஏ.எம்.கே.பி.கே. சமிலா அத்தபத்து தலைமையில் இடம்பெற்றது. இதில் இலங்கைத் தொழிலாளர் காங்கிஸ் சார்பாக வேலு யோகராஜின் பெயர் முன்மொழியப்பட்டது. அதனையடுத்து இரண்டாவது நபரின் பெயர் முன்மொழியப்படாதனால் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினர் வேலு யோகராஜ் சபையின் தவிசாளராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதில் மக்கள் போராட்ட முன்னணி உறுப்பினர் நடுநிலை வகித்தார். இந்தப் பிரதேச சபைக்கு உப தவிசாளரைத் தெரிவு செய்வதற்காக மூன்று பேர் போட்டியிட்டனர். அந்தவகையில், தேசிய மக்கள் சக்தி சார்பில் ஹேவகே ஆஷா தில்ருக்ஷி பொன்சேகா, ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் எம்.கே. சரத் குமார சிங்க பத்மசிறி மற்றும் ஜெயகுமார் ஜெயசங்கர் ஆகியோர் போட்டியிட்டனர். இதன்போது, பகிரங்க முறை வாக்கெடுப்புக்கு 13 வாக்குகள் கிடைக்கப் பெற்றதனால், பகிரங்க முறை வாக்கெடுப்பு இடம்பெற்றது.

இதில் தேசிய மக்கள் சக்தி சார்பாகப் போட்டியிட்ட ஹேவகே ஆஷா தில்ருக்ஷி 13 வாக்குகளைப் பெற்று உப தவிசாளராகத் தெரிவானர். இவருக்கு எதிராகப் போட்டியிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களான எம்.கே. சரத் குமார சிங்க பத்மசிறி 4 வாக்குகளையும், ஜெயகுமார் ஜெயசங்கர் 5 வாக்குகளையும் பெற்றுக்கொண்டனர். இதன்போது, மக்கள் போராட்ட முன்னணியின் உறுப்பினரும், ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரும் நடுநிலை வகித்தனர்.

நுவரெலியா பிரதேச சபை 24 உறுப்பினர்களைக் கொண்டது.

தேசிய மக்கள் சக்தி - 07
ஐக்கிய மக்கள் சக்தி - 05
ஐக்கிய தேசியக் கட்சி - 01
சுயேச்சைக் குழு - 02
இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் - 06
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன - 01
மக்கள் போராட்ட முன்னணி - 01
ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பு -01

# இலங்கையில் மற்றுமொரு தொகுதியினருக்கு கொடுப்பனவு வழங்க அரசாங்கம் தீர்மானம்



கொழும்பு, ஜூன் 18

அரசாங்க மற்றும் தனியார் பராமரிப்பு நிலையங்களில் உள்ள சிறுவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவு ஒன்றை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மகளிர் மற்றும் சிறுவர் விவகாரங்கள் அமைச்சர் இது தொடர்பில் முன்வைத்த அமைச்சரவைப் பத்திரம் ஒன்றிற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளது.

அதன் பிரகாரம் பராமரிப்பு நிலையங்கள் மற்றும் வீதியோரங்களில் வாழும் சிறுவர்களுக்கு மாதாந்தம் ஐயாயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது.

அவற்றில் மூன்றாயிரம் ரூபாவை அவர்கள் தங்கி வாழும் பராமரிப்பு நிலையங்களுக்கு வழங்கவும் மிகுதி இரண்டாயிரம் ரூபாவை சிறுவர்களின் எதிர்கால நலன் கருதி சேமிப்புத் திட்டம் ஒன்றில் வைப்புச் செய்யவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதற்காக தேசிய சேமிப்பு வங்கியின் ஒத்துழைப்பையும் அரசாங்கம் பெற்றுக் கொண்டுள்ளது. (ஐ)

# மின் கட்டணம் செலுத்துவதில் அரசாங்கம் வெளியிட்ட தகவல்




கொழும்பு, ஜூன் 18

மின்சார கட்டண பட்டியலை குறுஞ்செய்தி சேவை மூலம் பெறும் வசதி இல்லாத நுகர்வோருக்கு அவர்களின் கோரிக்கையின் பேரில் மின் கட்டண பட்டியல் வழங்கப்படும் என எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

எந்தவொரு மின் நுகர்வோருக்கும் உடனடியாக மின்சாரம் துண்டிக்கப்படாது என அவர் நேற்று நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

உரிய காலத்திற்குள் மின் கட்டணம் செலுத்தப்படாவிட்டால், ஒரு மாதம் மற்றும் 16 நாட்களின் பின்னர் மின்சாரம் துண்டிக்கப்படும் என பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

நேற்றைய நாடாளுமன்ற அமர்வின் போது, கொழும்பு மாவட்ட உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் விதமாக அமைச்சர் இதனை கூறினார்.

குறுஞ்செய்தி சேவை மூலம் மின் கட்டணத்தை வழங்கும் நடைமுறை இரண்டு வருடங்களாக முன்னெடுக்கப்படுகிறது. எனினும் 2.9 சதவீத மின்சார நுகர்வோர் மட்டுமே குறுஞ்செய்தி பெற பதிவு செய்யப்படவில்லை என அமைச்சர் குறிப்பிட்டார்.

குறுஞ்செய்தி சேவை செயல்பாட்டில் இருக்கும்போது தொலைபேசி அழைப்பு விடுப்பதால் கூடுதல் செலவுகள் மற்றும் ஊழியர்கள் தேவை ஏற்படும். இதனால் இது தேவைக்கேற்ப பரிசீலிக்கப்பட வேண்டும் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

எது செயல்படுத்தப்பட்டாலும், அதற்கு பதிலளிக்காத ஒரு குறிப்பிட்ட சதவீதம் பேர் இருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (ஐ)

# பயணிகள் பேருந்து மோதி விபத்து – 23 பேர் காயம்



கொழும்பு, ஜூன் 18

இரத்தினபுரி - கொழும்பு பிரதான வீதியின் மீன்னான பகுதியில் பேருந்தும் கொள்கலன் லொறியும் மோதி பாரிய விபத்து ஒன்று இடம்பெற்றுள்ளது. இந்த விபத்தில் 23 பேர் படுகாயமடைந்துள்ளனர். இந்த விபத்து இன்று காலை இடம்பெற்றுள்ளது. விபத்தின் பின் கொழும்பு - இரத்தினபுரி பிரதான வீதியில் சுமார் ஒரு மணி நேரம் போக்குவரத்து தடைபட்டது. விபத்தில் காயமடைந்த சுமார் 23 பேர் எஹெலியகொட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களின் நிலைமை மோசமாக இல்லை, மேலும் விபத்து குறித்து எஹெலியகொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# குழந்தை பராமரிப்பு பெண்களுக்கான பிரச்சினை மட்டுமல்ல



கொழும்பு, ஜூன் 18

குழந்தைப் பராமரிப்பு என்பது பெண்களுக்கான பிரச்சினை மட்டுமல்ல, அது ஒரு பொருளாதார மற்றும் கொள்கை ரீதியான பிரச்சினை என்றும், பெண்கள் வேலை மற்றும் பராமரிப்பை சமநிலைப்படுத்த உதவுவது சரியானது மட்டுமல்ல, பொருளாதார முன்னேற்றத்திற்கும் அவசியமானது என்றும் பிரதமர் கலாநிதி ஹறிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். இலங்கையில் பெண்களின் அதிகரித்த பொருளாதார பங்களிப்பை செயல்படுத்துபவராக குழந்தைப் பராமரிப்புக்கான உலக வங்கி குழு நிகழ்வில் செவ்வாய்க்கிழமை (17) கொழும்பில் உள்ள சினமன் லைஃப் ஹோட்டலில் நடைபெற்ற உலக வங்கி குழு நிகழ்வில் பங்கேற்ற பிரதமர் டாக்டர் ஹறிணி அமரசூரிய இந்தக் கருத்துக்களை குறிப்பிட்டுள்ளார்.

குழந்தைப் பராமரிப்பு சேவைகள் மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிக்கும் அதே வேளையில், பணியிடத்தில் செழித்து வளர பெண்களுக்கு எவ்வாறு வாய்ப்புகள் வழங்கப்படலாம் என்பது குறித்து வட்டமேசைக் கூட்டம் முக்கியமாக கவனம் செலுத்தியது. முக்கிய உரையை நிகழ்த்திய பிரதமர் டாக்டர் ஹறிணி அமரசூரிய, ஊதியம் அல்லது செலுத்தப்படாத பங்களிப்புகள் இரண்டிலும் பெண்கள் பொருளாதாரத்தின் மையமாக உள்ளனர் என்பதை எடுத்துரைத்தார். இருப்பினும், தடைகள் அவர்களின் பணியாளர்கள் பங்கேற்பை தொடர்ந்து கட்டுப்படுத்துகின்றன.

இலங்கையில் பெண்களின் தொழிலாளர் பங்களிப்பு 32மூ மட்டுமே என்பது உண்மைதான், இது ஆண்களின் பங்களிப்பு 74மூ ஐ விட கணிசமாகக் குறைவு, இருப்பினும், பெண்களின் செலுத்தப்படாத பங்களிப்புகள் புள்ளிவிவர ரீதியாக சேர்க்கப்படாததால், இந்தப் புள்ளிவிவரம் பெண்களின் பொருளாதார பங்களிப்புகளின் முழு நோக்கத்தையும் கைப்பற்றத் தவறிவிட்டது.

பாலின இடைவெளியைக் குறைப்பது இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை 20மூ வரை அதிகரிக்கக்கூடும், ஏனெனில் இது ஒரு சமூக இலக்கு மட்டுமல்ல, குடும்ப நல்வாழ்வு மற்றும் தேசிய வளர்ச்சியை வலுப்படுத்தும் ஒரு பொருளாதார உத்தியாகும். பெண்களைப் பணியமர்த்துவதை ஆதரிப்பதற்காக குழந்தை பராமரிப்பு சேவைகளை விரிவுபடுத்துவதற்காக இலங்கை அரசாங்கம் பெண்கள் மற்றும் குழந்தைகள் விவகார அமைச்சகம் மூலம் ஆரம்பகால குழந்தை பருவ மேம்பாட்டு (ECD) திட்டங்கள் போன்ற நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

குழந்தை பாதுகாப்பு சேவைகளை வழங்கும் வணிகங்களுக்கு வரி சலுகைகள் வழங்கப்பட்டு வருவதாகவும், உழைக்கும் குடும்பங்களுக்கு பொருளாதார உதவி வழங்கப்பட்டு வருவதாகவும், அத்தகைய சேவைகளின் தரத்தை உறுதி செய்வதற்காக ஒரு தேசிய குழந்தை பாதுகாப்பு கட்டமைப்பு ஏற்கெனவே செயல்பாட்டில் இருப்பதாகவும் பிரதமர் மேலும் கூறினார். மேலும், இந்த சேவைகளை வழங்குவதை விரிவுபடுத்துவதில் பொது-தனியார் கூட்டாண்மை மிக முக்கியமானது என்பதை அவர் வலியுறுத்தினார். இது தொடர்பாக உலக வங்கியின் ஆதரவை பிரதமர் பாராட்டினார். இந்த நிகழ்வில் பெண்கள் மற்றும் குழந்தைகள் விவகார அமைச்சின் செயலாளர் திருமதி கே.டி.ஆர். ஒல்கா, இலங்கைக்கான உலக வங்கி குழுவின் நாட்டு மேலாளர் கெவோர்க் சர்க்சியன் மற்றும் அரசு, தனியார் துறை, சிவில் சமூகம் மற்றும் உலக வங்கி குழுவின் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)

# ஆந்திராவில் பெண் நக்சல் உட்பட 3 பேர் சுட்டுக்கொலை பாதுகாப்பு படை அதிரடி



ஆந்திராவில் பாதுகாப்பு படையினர் நடத்திய துப்பாக்கச்சூட்டில் நக்சல் அமைப்பின் தலைவன் சலபதியின் மனைவி அருணா உட்பட நக்சலைட்டுகள் 3 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஆந்திரா மாநிலம், அல்லூரி சீதாராம ராஜு/ மாவட்டத்தில் நக்சலைட்டுகள் பதுங்கி இருப்பதாக உளவுதுறைக்கு தகவல் வந்தது. அப்பகுதியில் பாதுகாப்பு படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அப்போது பதுங்கி இருந்த நக்சலைட்டுகள் பாதுகாப்பு படையினர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

இதையடுத்து, பதிலுக்கு பாதுகாப்பு படையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் நக்சல் அமைப்பின் தலைவன் சலபதியின் மனைவி அருணா உட்பட நக்சலைட்டுகள் 3 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அவர்களிடம் இருந்து வெடிமருந்துகள் மற்றும் மூன்று யுமு-47 துப்பாக்கிகளை பாதுகாப்பு படையினர் மீட்டனர். அப்பகுதியில் நக்சலைட்டுகள் பதுங்கி இருக்கிறார்களா என்பது குறித்து தேடுதல் வேட்டை நடந்து வருகிறது. (ஐ)

## தி.மு.க., உடன் பா.ம.க., இணைந்தால் கூட்டணியில் இருந்து வெளியேறுவோம்



"தி.மு.க., உடன் பா.ம.க., இணைந்தால் கூட்டணியில் இருந்து வெளியேறுவோம். நான் இடையூறாக இருக்க மாட்டேன்" என விடுதலை சிறுத்தை கட்சி தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து, அவர் செய்தி சேனலுக்கு அளித்த பேட்டி: பா.ம.க., உடன் உறவை முறித்து கொண்டது, நாங்கள் ஆழமாக சிந்தித்து எடுத்த முடிவு. நாங்கள் வன்னியர் சமூகத்திற்கு எதிரானவர்கள் அல்ல. பா.ம.க., வன்னியர்களையும், தங்களுக்கு சாதகமாக, கட்சியின் நலனுக்காக பயன்படுத்தி கொள்கிறார்கள். தலித்களுக்கு எதிரான வெறுப்பு அரசியலை அவர்கள் கையில் எடுத்தார்கள்.

முதலில் இட ஒதுக்கீடு போராட்டத்தின் போது, தலித் மக்கள் பாதிக்கப்பட்டார்கள், குடிசைகளை கொளுத்தினார்கள். எத்தனையோ பிரச்னைகள் நடந்தது. அது எல்லாம் நடந்து முடிந்துவிட்டது.

நாம் எல்லாம் ஒற்றுமையாக இருப்போம் என ஒரு தாய் மக்கள் மாநாடு நடத்தினார். ஒரு தாய் மக்கள் மாநாடு நடத்திய, தலித் அல்லாத முதல் தலைவர் ராமதாஸ்.

நான் ஏற்கனவே சொன்ன மாதிரி, தலித் சமூகத்தை சேர்ந்தவர்களை பொதுச்செயலாளர் ஆக்கினார்.

அம்பேத்கருக்கு சிலைகளை நிறுவினார். தலித் சமூகத்தை சேர்ந்தவர் தான் பா.ம.க.,வின் நிரந்தர பொதுச்செயலாளர் ஆக இருப்பார். முதல் முறையாக, இரண்டு தலித் சமூகத்தை சேர்ந்தவரை அமைச்சர் ஆக்கினார். இது எல்லாம் அந்த காலத்தில் சரி. இரண்டு சமூகங்களுக்கு இடையே நல்லிணக்கத்தை உருவாக்குவதற்காக அளப்பறிய முயற்சி. வரலாற்றில் என்றைக்கும் பொன் எழுத்துகளால் பொறிக்க வேண்டிய ஒன்று.

அதற்கு முன்னாள் நடந்த வன்முறையை விடுங்கள். அந்த வன்முறையால் ஏற்பட்ட பாதிப்புகளை சரி செய்ய வேண்டிய ஒரு செயல்திட்டமாக இது எல்லாம் இருந்தது. அதன் பிறகு அதனை தொடர்ந்து செய்ய வேண்டுமா, இல்லையா? சமூக நல்லிணக்கத்தை பேண வேண்டுமா, இல்லையா? நான் எப்படி உங்களுக்கு எதிரியாக இருக்க முடியும்? நான் எந்த இடத்தில் உங்களுக்கு எதிராக பேசி இருக்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

தி.மு.க., கூட்டணியில் இடம் பெற்றால், திருமாவளவன் என்ன நினைத்து கொள்வார் என ராமதாசுக்கு சங்கடம் இருப்பதாக பேசப்படுகிறது என கேள்வி எழுப்பட்டது. இதற்கு திருமாவளவன் அளித்த பதில்: நான் யாருக்கும் இடையூறாக இருக்க மாட்டேன். நான் யாருக்கும் நெருக்கடி தர மாட்டேன். நிர்பந்தம் தரமாட்டேன். அது அவர்கள் எடுக்கிற முடிவுகள்.

தி.மு.க.,வுக்கும், பா.ம.க.,வுக்கும் இடையே அப்படி ஒரு நல்லிணக்கம் இருந்து, அப்படி ஒரு முடிவு எடுத்தால் நான் தலையிட மாட்டேன். நாங்கள் வெளியேறுவோம். நாங்கள் தனியாக நிற்போம்.

சும்மா வேட்பாளர்களை போடுவோம். பார்மாலிட்டி தேர்தலை சந்திப்போம்.

ஜெயிப்பது, தோற்பது பற்றி எங்களுக்கு பிரச்னையே கிடையாது. நாங்கள் எங்களது கொள்கை ஏதுவோ அதுக்காக தான் களத்தில் நிற்கிறோம். இந்த தேர்தலில் நான்கு பேர் இருக்கிறோம். அடுத்த தேர்தலில் ஒன்றுமே இல்லை என்றாலும் நாங்கள் கவலைப்பட போவதில்லை. இவ்வாறு திருமாவளவன் பதில் அளித்தார். (ஐ)

## மா விவசாயிகளுக்கு ஆதரவாக நாளை மறுநாள் உண்ணாவிரதம் அ.தி.மு.க., அறிவிப்பு



மா விவசாயிகளுக்கு ஆதரவாக நாளை மறுநாள் அ.தி.மு.க., சார்பில் உண்ணாவிரத போராட்டம் நடைபெறும் என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் இ.பி.எஸ். தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் நெல், கரும்பு சாகுபடிகளைத் தொடர்ந்து, அதிக நிலப் பரப்பில் சாகுபடி செய்யப்படுவது 'மா' மற்றும் 'தென்னை' ஆகும். சுமார் 1 லட்சத்து 14 ஆயிரம் ஹெக்டேரில் 'மா' சாகுபடி செய்யப்படுகிறது. இதில் குறிப்பாக, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மட்டும் சுமார் 35 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் 3 லட்சம் மெட்ரிக் டன் மாம்பழும் உற்பத்தி செய்யப்படுகிறது. அதில் 2 லட்சம் மெட்ரிக் டன் மாம்பழத்தில், மாம்பழக் கூழ் தயாரிக்கப்படுகிறது.

இந்த ஆண்டு மாங்காய் மற்றும் மாம்பழத்தின் விலையில் கடும் வீழ்ச்சி ஏற்பட்டதாலும், மாம்பழக் கூழ் தயாரிக்க மாம்பழங்களை கொள்முதல் செய்வதில் பெரும் பின்னடைவு இருப்பதாலும், கிருஷ்ணகிரி மாவட்ட 'மா' விவசாயிகள் பெரிதும் துன்பத்திற்கு ஆளாகி உள்ளார்கள். தங்களுக்கு ஏற்பட்டுள்ள நஷ்டத்தை சரிகட்ட வேண்டுமென்று விடியா தி.மு.க ஸ்டாலின் மாடல் அரசுக்கு, கிருஷ்ணகிரி கலெக்டர் மூலம் மனு அளித்தும், இதுவரை முறையான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்று விவசாயிகள் தங்கள் ஆதங்கத்தைத் தெரிவிக்கின்றனர்.

மாங்கூழ் தொழிற்சாலைகள் கிலோ ஒன்றுக்கு 4 முதல் 5 ரூபாய் மட்டுமே தர முன் வருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். 'மா' விவசாயிகள் கொள்முதல் விலையாக மாம்பழம் கிலோ ஒன்றுக்கு 13 ரூபாய் வழங்க வேண்டும் என்றும், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 30,000 ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும் என்றும், மாம்பழக் கூழுக்கான புளுவு வரியை 12 சதவீதத்தில் இருந்து 5 சதவீதமாகக் குறைக்க வேண்டும் என்பது உள்ளிட்ட விவசாயிகளின் பிரச்சனைகளைப் போக்கவும், மேலும் அவர்கள் தெரிவித்துள்ள மற்ற கோரிக்கைகளைத் தீர்ப்பதற்கும் முத்தரப்பு பேச்சுவார்த்தை என்று மாவட்ட நிர்வாகம் சார்பில் நாடகமாடப்படுகிறதே தவிர, இதுவரை எந்தத் தீர்வும் எட்டப்படவில்லை.

எனவே, கிருஷ்ணகிரி மாவட்டம் உள்ளிட்ட தமிழகம் முழுவதும் 'மா' பயிரிட்டுள்ள விவசாயிகளின் நியாயமான கோரிக்கைகளை உடனடியாகத் தீர்த்துவைக்க தி.மு.க., அரசை வலியுறுத்தி, அ.தி.மு.க., சார்பில் 20.6.2025 வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை, கிருஷ்ணகிரி பஸ்நிலையம் அருகில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறும்.

இந்த உண்ணாவிரதப் போராட்டம், கழக துணைப் பொதுச் செயலாளர் கே.பி. முனுசாமி தலைமையில் நடைபெறும். (ஐ)

## முருக பக்தர்கள் மாநாடு: மதுரை செல்ல சிறப்பு ரயில்




மதுரையில் வரும், 22ல் நடக்கும் முருக பக்தர்கள் மாநாட்டிற்கு சிறப்பு ரயில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வரும், 21ம் தேதி இரவு 9:55க்கு, சென்னை எழும்பூரில் இருந்து புறப்படும் சிறப்பு ரயில், மறுநாள் காலை, 5:40 மணிக்கு மதுரை சென்றடையும். அங்கிருந்து புறப்பட்டு, காலை, 8:45க்கு திருநெல்வேலி செல்லும்.

அதேபோல, 22ம் தேதி இரவு 9:40 மணிக்கு திருநெல்வேலியில் புறப்பட்டு, நள்ளிரவு, 12:30 மணிக்கு மதுரை வரும் சிறப்பு ரயில், மறுநாள் காலை, 8:15 மணிக்கு எழும்பூர் சென்றடையும். மாநாட்டிற்கு வரும் முருக பக்தர்கள், இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளலாம் என, தமிழக பா.ஜ., தலைவர் நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

தாம்பரம், செங்கல்பட்டு, விழுப்புரம், விருத்தாசலம், திருச்சி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், திண்டுக்கல், சாத்துார், கோவில்பட்டியில் நின்று செல்லும். டிக்கெட் முன்பதிவு இன்று காலை 8:00 மணிக்கு துவங்குகிறது என, தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது. (ஐ)



# அன்பே ஆயுதம்!



## ஹசி

'இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மனிதர்கள் பிறப்பினாலோ திருமணத்தினாலோ அல்லது தத்தெடுப்பது மூலமாகவோ சேர்ந்து வாழும் அமைப்பு' என்பதே குடும்பம் ஆகும்.

ஆனால், மனரீதியான பிணைப்பை, உணர்வுரீதியான நெருக்கத்தைத் திருமணம் என்ற சடங்கு உருவாக்கிவிட முடியாது. இரு மனிதர்களுக்கு இடையேயான அன்பும் அன்யோன்யமும் மட்டுமே கொண்டுவர முடியும்.

திருமண உறவாக இருந்தாலும் சரி, லிவ்விங் டுகெதர் அல்லது காதல் உறவாக இருந்தாலும் சரி, அன்யோன்யமான உறவுகள் அல்லது நெருக்கமான உறவுகள், மிகவும் கஷ்டமான ஒன்றாக, சிக்கல்கள் நிறைந்ததாக இருக்கின்றன. நிறைய பேர் வாழ்வில் காண கிடைக்காத ஒன்றாகவும்கூட இருக்கின்றன.

இந்த உறவுகளின் சிறப்பும் தனித்தன்மையும் என்னவென்றால், நம்மையும் மீறிய உணர்வுகளையும் நம்மையும் மீறி உணர்வுகள் நம்மிடமிருந்து வெளிப்படுவதையும் சொல்லலாம்.

ஒருமுறை ஆராய்ச்சியாளர்கள் குடும்ப உறவில் ஏற்படும் பிணைப்பை, உணர்வு ரீதியான மாற்றங்களைப் பற்றி அறிந்துகொள்ள ஒரு தாய் முயலையும் இரண்டு குட்டி முயல்களையும் எடுத்துக்கொண்டார்கள்.

முதலில் இந்த மூன்று முயல்களையும் ஒரு வாரம் தனித்தனியே வைத்தார்கள். ஒரு வார இடைவெளிக்குப் பிறகு, அந்த அம்மா முயலின் முன்னால் ஒரு குட்டி முயலை துன்புறுத்தினார்கள். அந்த அம்மா முயலின் இதயத் துடிப்பும் ரத்த அழுத்தமும் மிக அதிகமானது.

மீண்டும் ஒரு வாரம் கழித்து இன்னொரு குட்டி முயலை, தாய் முயலிடமிருந்து வெகுதூ ரத்தில் வைத்து அந்த ஆராய்ச்சியாளர்கள் காயப்படுத்தினார்கள். வெகுதூரத்தில் இருக்கும் தனது குட்டி முயலுக்குத் துன்பம் நிகழ்ந்த போது, அந்த அம்மா முயலின் இதயத் துடிப்பும் ரத்த அழுத்தமும் அதிக அளவு அதிகமானது.

இதே மாதிரி நம்மையும் மீறிய உணர்வுகளை, நம்மையும் மீறி நாம் செய்யும் ஒரு சில செயல்களை, இந்த நெருக்கமான உறவுகளில், காதல் உறவுகளில் **(intimate relationships)** பார்க்கலாம்.

இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று ஏன் அவ்வளவு எளிதாக அமைவது இல்லை?

தன்னுடைய முப்பத்தி எட்டு வயதில், காதல் உறவில் இருந்து வெளியே வந்தவர்தான் சரவணன். இப்போதுதான் சுதந்திரமாக இருக்கிறேன். பிடித்ததைச் செய்கிறேன். தனியாக வாழ்வதுதான் இன்பமாக உள்ளது என அடிக்கடி பெருமையாகச் சொல்லிக்கொள்வார்.

அதே சரவணன் சில நேரம் இப்படியும் சொல்வார்: "அலுவலகம் முடிந்து வரும்போது, கதவைத் திறந்து நுழையும்போது வெறிச்சென்று இருக்கிறது. ஊர் சுற்றப் போனால்கூட, முடித்துவிட்டு வரும்போது மிகவும் வெற்றிடமாக உள்ளது. ஏதாவது கவலையாக உள்ளபோது. அதைப் பகிர்ந்துகொள்ளக்கூடப் பக்கத்தில் யாரும் இல்லாததுபோல் இருக்கும்."

ஒருமுறை அவரிடம் உங்களுக்காக ஒரு துணையை ஏற்படுத்திக்கொள்ள எது தடையாக இருக்கிறது எனக் கேட்டேன். இரண்டு விஷயங்களைக் குறிப்பிட்டு சொன்னார்.

1. என்னுடைய இப்போதைய சுதந்திரம் பறிபோய் விடுமோ என்று பயமாக இருக்கிறது.

2. வரும் இன்னொரு நபருக்காக என்னை, நான் வாழுமிடத்தை நிறைய மாற்றிக்கொள்ள வேண்டியிருக்கும் என்றும் பயமாக இருக்கிறது.

தான் நினைத்தபடி எல்லாம் இருக்க வேண்டும் என்ற ஆசையும் எதற்காகவும் அதை விட்டுக்கொடுக்க மாட்டேன் என்ற எண்ணமும், நான் வாழுமிடத்தைகூட அட்ஜஸ்ட் செய்ய மாட்டேன் என்றால் தனியாக மகிழ்ச்சியாக இருக்க வேண்டியது தானே என்றேன்.

இருக்கலாம்தான். ஆனால், எப்போதுமே தனிமையில் இருக்கவும் சங்கடமாக இருக்கிறது. நண்பர்களில் பலர் திருமணம் முடிந்து குடும்ப வாழ்வில் பிஸியாகிவிட்டார்கள்.

திருமண வாழ்வும் நன்றாகத்தான் இருக்குமோ என்றும் சில நேரங்களில் தோன்றுகிறது. என்னைப் பற்றி என்னுடைய இன்ப துன்பங்களைப் பகிர்ந்துகொள்ள



யாரும் அருகில் இல்லை என்றபோது கவலை என்னைச் சூழ்ந்துகொள்கிறது என்றார்.

இவர்களுக்கு உண்மையில் என்னதான் பிரச்சினை? தனியாக இருப்பதும் பிடிக்கவில்லை. குடும்பமாக வாழ்வதும் பிடிக்கவில்லை. தனிமைக்கும் பயம், உறவில் இருப்பதற்கும், திருமணத்திற்கும் பயம்.

ஆனால், இந்தக் குழப்பம் சாதாரணமான ஒன்றுதான். ஏனென்றால், நாம் பார்த்த அல்லது எதிர்கொண்ட விஷயங்கள், குறிப்பாக உறவுகளில் சந்தித்த சரிவுகள் பயத்தை மனதில் ஏற்படுத்தி அன்யோன்ய உறவுகள் வேண்டாம் என முடிவெடுக்க வைத்திருக்கும்.

ஆனால், நாம் காலம் காலமாக வாழ்ந்துவந்தது தனிமையில் இல்லைதானே? எனவே நம்மையும் மீறிய ஓர் ஈர்ப்பு உறவுகளிலும், உறவுமுறைகள் மீதும் அதிலும் குறிப்பாக இன்டிமேட் ரிலேஷன்ஷிப் மீது இருக்கும். இதை, ஃபுரூஸ் லிப்டன் என்ற உயிரியலாளர் அழகாகச் சொல்வார், "மனிதர்கள் தனியாக வாழ்வதற்கானவர்கள் அல்ல. பிணைப்பு ஏற்படுத்திக்கொள்வதற்கான உயிரியல் ரீதியான ஒரு உந்துதல், ஒவ்வொரு மனிதருக்குள்ளும் அடிப்படையில் இருந்துகொண்டே இருக்கும்."

யோசித்துப் பார்த்தால், உண்மையில் இங்கு அன்யோன்ய உறவுகள் வேண்டாம் எனச் சொல்வதற்குக் காரணம், உறவினால் வரும் அன்யோன்னியம் கடைசி வரை நிலைக்காது, குறைந்த நாட்களில் கைவிட்டுப் போய்விடும் என்ற பயம்தான்.

ஏனென்றால் மனிதர்களுக்குக் காதலிப்பது, காதலிக்கப்படுவது, அன்யோன்யமான உறவில் இருப்பது, இளமையிலும் முதுமையிலும் எல்லாப் பருவ வயதுகளிலும் பிடித்தே இருக்கிறது.

ஆக இந்த அடிப்படையான உயிரியல் தூண்டுதலும் அன்யோன்யத்தின் மீதான ஆசையும் ஒருபுறம் இழுக்க, மறுபுறம் நம் மூளை சொல்லும் வேண்டாம் என்ற தீர்வுக்கும் இடையே எழும் குழப்பம்தான்.

சிலருக்குக் குழப்பம் குறைவு. ஆனால், தேர்வு செய்வதில் சிக்கல். திருமணத்திற்குத் தயாராகிக்கொண்டிருந்த நண்பர் ஒருவர், உங்கள் துணைவர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இவ்வாறு பதில் அளித்தார்.

பார்ப்பதற்கு சூப்பராக இருக்க வேண்டும்.
நன்றாக படித்திருக்க வேண்டும்.
பணக்காரக் குடும்பமாக இருக்க வேண்டும்.
நல்ல குடும்பமாக இருக்க வேண்டும்.
சமையல் நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும்.
என் குடும்பத்தினருடன் ஒத்துப்போக வேண்டும்.
எனக்கு முழு ஆதரவாக, நான் தவறு செய்தாலும், எனக்கு ஆதரவாக இருந்த அன்பு செய்ய வேண்டும். நான் சொல்வது அனைத்தும் அப்படியே கேட்க வேண்டும்.

அவர் மனதில் இருந்ததை, அப்படியே சொன்னதற்குப் பாராட்டிவிட்டு அவரிடம், இந்த லிஸ்டில் உள்ளபடி நீங்கள் இருக்கிறீர்களா எனக் கேட்டவுடன், பதில் இல்லாமல் முழித்தார். 'அப்படி நீங்கள் கேட்பவை எல்லாம் அடங்கிய ஒரு டிசைன் இந்த உலகத்தில் தேடுவதை விட்டுவிடலாம் வேண்டுமானால், நீங்கள் அந்த டிசைனாக இருந்துகொள்ள முயற்சி செய்யலாம். எப்போதும் லிஸ்டில் மிக முக்கியமான மூன்றிலிருந்து ஐந்து விஷயங்களை வைத்திருக்கலாம்' என்று சொன்னேன்.

இன்னும் சிலர் அடைந்தால் மகாதேவி என்ற ரேன்ஞ்சில், தன்னைச் சட்டையே செய்யாத ஒருவரை நினைத்து வருடக் கணக்கில் உருகிக்கொண்டிருப்பார்கள். அவர்களைப் பார்த்தாலும் இதுதான் தோன்றும்.

இந்தப் பிரபஞ்சத்தில் இத்தனை கோடி மக்கள் இருக்கும் போது தனிமையில் வாழ வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது? குழப்பங்களையும் பிடிவாதங்களையும் ஓரமாக வைக்கலாமே?

நீங்கள் குடும்ப வாழ்வில் நுழையாமல் இருந்தால், சவால்கள் எதுவும் இல்லாமல் வாழ்வே இன்பமயமாக ஆகிவிடுமா என்ன? ஆனால், அன்யோன்யமான உறவுகள் வாழ்வில் கண்டிப்பாக இன்பத்தைச் சேர்க்கும்.

நான் தனியாக இருப்பதால்தான், இவ்வளவு சாதிக்க முடிகிறது என்பதெல்லாம், நாம் சொல்லிக்கொள்ளும் சமாதானங்களே. உண்மையில் இயற்கையாக அமைந்த பிணைப்பிற்கான உந்துதலை ஒதுக்கிக்கொள்ளாமல் இருத்தல் அல்லது உறவுகளைக் கையாளத் தெரியாத இயலாமைகளே.

எனவே, அது திருமணமானாலும் சரி, லிவ்விங் டுகெதர் அல்லது காதல் உறவானாலும் சரி. உங்களுக்கு ஏற்புடையதை வாழ்வில் வரவேற்கலாமே?

வாழ்க்கையின் எந்த அம்சமானாலும் சவால்கள் இருக்கத்தான் செய்யும். அதை எப்படிக் கையாண்டு கொண்டிருக்கிறோமோ, அதேபோல் அன்யோன்ய உறவுகளில் வரும் சவால்களையும் மிக எளிதாகக் கையாளலாம்.

# போர் தொடங்குகிறது சமரசத்துக்கு வாய்ப்பில்லை ஈரான் தலைவர் அயதுல்லா அலி கமேனி அறிவிப்பு





"போர் தொடங்குகிறது. சமரசத்துக்கு வாய்ப்பில்லை" என அமெரிக்கா, இஸ்ரேலுக்கு, ஈரான் தலைவர் அயதுல்லா அலி கமேனி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஈரான், இஸ்ரேல் நாடுகளுக்கும் இடையேயான போர் கடந்த 13ம் தேதி தொடங்கியது. ஈரான் அணுசக்தி நிலையங்கள், ராணுவ நிலைகளை குறி வைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. பதிலுக்கு ஈரானும் இஸ்ரேல் மீது தாக்குதலில் ஈடுபட்டு வருகிறது.

இந்நிலையில், கோட்டை வாயிலில் படைகள் வாள் ஏந்தி நிற்கும் புகைப்படத்தை சமூக வலைதளத்தில் ஈரான் தலைவர் அயதுல்லா அலி கமேனி பதிவிட்டுள்ளார். அவர் அமெரிக்கா, இஸ்ரேலுக்கு எச்சரிக்கை விடுத்து, வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

போர் தொடங்குகிறது. பிராந்திய பயங்கரவாதத்துக்கு எதிராக பலத்துடன் இயங்க வேண்டும், சமரசத்துக்கு வாய்ப்பில்லை. டெல் அவிவ் மீது குயவவயா-1 ஹைப்பர்சோனிக் ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டது. இவ்வாறு அவர் கூறினார்.

இஸ்ரேல்-ஈரான் மோதல் தொடர்ந்து வரும் நிலையில், அமெரிக்க அதிபர் டிரம்ப் ஈரானை நிபந்தனையின்றி சரணடையுமாறு அழைப்பு விடுத்த போதிலும், இரு நாடுகளும் மாறி, மாறி தாக்குதல் நடத்தி வருகிறது.

ஈரான் இஸ்ரேலை நோக்கி இன்று ஏவுகணை தாக்குதல் நடத்தியது. தற்போது, ஈரான் தலைவர் அயதுல்லா அலி கமேனி எச்சரிக்கை விடுத்து இருப்பது போர் இன்னும் உக்கிரம் அடையும் என்பதை எடுத்துரைக்கிறது. (ஐ)

## ஈரான் அணு ஆயுதத்தை வைத்திருக்க முடியாது ஜி7 மாநாடு நிறைவில் கனடா பிரதமர் பேச்சு




ஈரான் ஒருபோதும அணு ஆயுதத்தை வைத்திருக்க முடியாது என ஜி7 மாநாடு நிறைவு விழாவில் கனடா பிரதமர் மார்க் கார்னி பேசுகையில் தெரிவித்தனர்.

அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான், பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, கனடா ஆகிய ஏழு நாடுகளை உள்ளடக்கியது, 'ஜி - 7' அமைப்பு. நடப்பாண்டிற்கான, 'ஜி - 7' நாடுகளின் உச்சி மாநாடு கனடாவின் கனனாஸ்கிஸ் என்ற இடத்தில் நடந்தது. அமெரிக்கா, பிரிட்டன், கனடா, பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகள் பங்கேற்றுள்ளன.

ஜி7 மாநாடு நிறைவு விழாவில் கனடா பிரதமர் மார்க் கார்னி பேசியதாவது: மீண்டும் உயர் தூதர்களை நியமிக்க நாங்கள் நடவடிக்கை எடுப்போம். பிரதமர் மோடி உடன் இன்றைய சந்திப்பு முக்கியமானது என்று நான் நினைக்கிறேன். பிரதமர் மோடி 2018ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஜி7 மாநாட்டிலும் கலந்து கொண்டார். அடுத்த ஆண்டு பிரான்சில் நடைபெறும் ஜி7 மாநாட்டிற்கு இந்தியப் பிரதமர் வருவார் என்று நான் முழுமையாக எதிர்பார்க்கிறேன்.

மத்திய கிழக்கில் அமைதியை நிலைநாட்ட ஜி7 தலைவர்கள் மீண்டும் வலியுறுத்தினர். பிராந்திய ஸ்திரமின்மை மற்றும் பயங்கரவாதத்தின் முக்கிய ஆதாரமாக ஈரான் உள்ளது. மேலும் ஈரான் ஒருபோதும் அணு ஆயுதத்தை வைத்திருக்க முடியாது என்பதில் நாங்கள் தொடர்ந்து தெளிவாக இருக்கிறோம். ஈரான் நெருக்கடியைத் தீர்ப்பது, காசாவில் போர் நிறுத்தம் உட்பட பல்வேறு விஷயங்களுக்கு தீர்வு காண நாங்கள் வலியுறுத்துகிறோம்.

உக்ரைன் தங்கள் நாட்டின் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய, ட்ரோன்கள், வெடிமருந்துகள் ஆகியவற்றிற்காக இரண்டு பில்லியன் டாலர்களுக்கு மேல் நிதியுதவியையும், உள்கட்டமைப்பை மீண்டும் கட்டியெழுப்ப 2.3 பில்லியன் டாலர் கடனையும் நாங்கள் அனுப்புகிறோம். இவ்வாறு கனடா பிரதமர் மார்க் கார்னி பேசினார். (ஐ)

## நிபந்தனையின்றி சரணடையுங்கள்: ஈரானுக்கு டிரம்ப் எச்சரிக்கை



"அமெரிக்காவின் பொறுமை குறைந்து வருகிறது. ஈரான் நிபந்தனையின்றி சரணடைய வேண்டும்," என அதிபர் டிரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஈரான் மீது கடந்த சில நாட்களாக இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. இதற்கு தாங்கள் பொறுப்பு அல்ல என அமெரிக்கா கூறியுள்ளது. அதே நேரத்தில் அமெரிக்கர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டால், பதிலடி கடுமையாக இருக்கும் என எச்சரித்து உள்ளது. ஈரான் அணுஆயுதம் தயாரிக்கக்கூடாது என அமெரிக்கா கூறி வருகிறது.

அமெரிக்க அதிபர் டிரம்பை கொல்ல ஈரான் விரும்புகிறது: இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு

இந்நிலையில், அமெரிக்க அதிபர் டிரம்ப் சமூக வலைதள பக்கத்தில் வெளியிட்ட பதிவில் கூறியுள்ளதாவது: ஈரானின் உச்ச தலைவர் என அழைக்கப்படும் அயதுல்லா காமெனி எங்கு மறைந்து இருக்கிறார் என்று எங்களுக்கு தெரியும். அவர் எங்களுக்கு எளிதான இலக்கு. ஆனால், அவர் பாதுகாப்பாக இருக்கட்டும்.

குறைந்தபட்சம் தற்போதைக்கு அவரை கொல்லப்போவதுகிடையாது. ஆனால், சாமானிய மக்களையோ, அமெரிக்க வீரர்களையோ ஏவுகணைகளை தாக்குவதை நாங்கள் விரும்பவில்லை. எங்களது பொறுமை குறைந்து வருகிறது. இந்த விவகாரத்தில் கவனம் செலுத்துவதற்கு நன்றி. நிபந்தனையின்றி சரணடையுங்கள். இவ்வாறு டிரம்ப் கூறியுள்ளார். (ஐ)




## இஸ்ரேலுக்கு தரவுகள் கசிவா் வாட்ஸ் அப் செயலியை நீக்குமாறு மக்களுக்கு ஈரான் உத்தரவு

ஈரான், இஸ்ரேல் நாடுகளுக்கும் இடையேயான போர் கடந்த 13ம் தேதி தொடங்கியது. ஈரான் அணுசக்தி நிலையங்கள், ராணுவ நிலைகளை குறி வைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. பதிலுக்கு ஈரானும் இஸ்ரேல் மீது தாக்குதலில் ஈடுபட்டு வருகிறது.

இருநாடுகளின் இடையேயான போர் உலக நாடுகளை கவலை கொள்ள செய்துள்ளது. ஈரான் மீது இஸ்ரேல் முரட்டுத்தனமாக தாக்குதல் நடத்தி வருவதாக அரபு, இஸ்லாமிய மற்றும் ஆப்பிரிக்க நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இந்நிலையில், இஸ்ரேலுடன் மோதல் உச்சக்கட்டத்தை நோக்கி நகர்ந்துள்ளதால், ஈரான் தமது குடிமக்களை தங்கள் செல்போன்கள் மற்றும் இன்னபிற எலக்ட்ரானிக் சாதனங்களில் இருந்து வாட்ஸ் அப்பை நீக்குமாறு வலியுறுத்தி உள்ளது. ஈரான் அரசு தொலைக்காட்சியில் இவ்வாறு வலியுறுத்தல் வெளியிடப்பட்டது.

ஈரானில் இருந்து பகிரப்படும் தகவல்கள் அனைத்தும் இஸ்ரேலுக்கு பகிர அல்லது அனுப்பப்படுவதாக எழுந்த சந்தேகத்தின் அடிப்படையில் இப்படி ஒரு அறிவிப்பு பிரகடனப்படுத்தப்பட்டு உள்ளது.

ஆனால், ஈரான் அரசின் இந்த வலியுறுத்தலை, உத்தரவை வாட்ஸ் அப் நிறுவனம் புறம் தள்ளிவிட்டது. வாட்ஸ் அப்பை நீக்குமாறு ஈரான் கூறியதை வாட்ஸ் அப் நிறுவனம் உறுதியாக மறுத்துள்ளது. இதுபோன்ற தவறான தகவல்கள் தங்களின் சேவைகளை பாதிக்கும், பயனர்களின் தனியுரிமையை பாதுகாப்பது எங்களின் கடமை என்றும் கூறி உள்ளது.

மேலும், யார், யாருக்கு என்ன செய்திகள் அல்லது குறிப்புகள் அனுப்புகின்றனர், தனிப்பட்ட தகவல் பரிமாற்றங்களை கண்காணிக்க மாட்டோம் என்று உறுதி அளித்துள்ளது. எந்த அரசாங்கத்துக்கும் இந்த தகவல்களை பகிர்வது இல்லை என்றும் கூறி உள்ளது.(ஐ)

## வல்வெட்டித்துறை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வல்வெட்டித்துறை நகர சபை சபா மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

16 உறுப்பினர்களைக் கொண்ட வல்வெட்டித்துறை நகர சபைக்கு நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் 7 ஆசனங்களையும், இலங்கைத் தமிழரசுக் கட்சி 5 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி 3 ஆசனங்களையும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஓர் ஆசனத்தையும் கைப்பற்றின.

நகர பிதா பதவிக்காக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில்

போட்டியிட்ட திருமதி. தவமலர் சுரேந்திரநாதனுக்கு 7 பேரும், இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட மகாலிங்கம் மயூரனுக்கு 6 பேரும் (தமிழரசு 5¸ ஈ.பி.டி.பி. 1) ஆதரவு வழங்கினர்.

தேசிய மக்கள் சக்தியின் மூன்று உறுப்பினர்களும் வாக்களிப்பில் நடுநிலை வகித்தனர்.

துணை நகர பிதாவாக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸைச் சேர்ந்த நாகதம்பி பத்மநாதன் தெரிவானார்.

## வலிகாமம்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திருமதி. தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

36 உறுப்பினர்களைக் கொண்ட வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்காக நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில்

இலங்கைத் தமிழரசுக் கட்சி 11 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி 9 ஆசனங்களையும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகியன தலா 5 ஆசனங்களையும், தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் சுயேச்சைக் குழு - 01 ஆகியன தலா இரண்டு ஆசனங்களையும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மற்றும் சுயேச்சைக் குழு - 02 ஆகியன தலா ஓர் ஆசனத்தையும் கைப்பற்றியிருந்தன.

இன்றைய தவிசாளர் தெரிவுக்கான போட்டியில் இலங்கைத்தமிழரசுக்கட்சிசார்பில்செல்வத்திசைநாயகம் தவநாயகமும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் தியாகராஜா நிரோ/ம், தேசிய மக்கள் சக்தி சார்பில் சிவசுப்பிரமணியம் சுகிர்தரூபனும் முன்மொழியப்பட்டனர்.

தவிசாளரைத் தெரிவு செய்வது பகிரங்க வாக்கெடுப்பா அல்லது இரகசிய வாக்கெடுப்பா என உள்ளூராட்சி ஆணையாளரால் கோரப்பட்டபோது, தவிசாளர் தெரிவை இரகசிய வாக்கெடுப்பா, பகிரங்க வாக்கெடுப்பா என்பதை முடிவு செய்வதைக் கூட இரகசிய வாக்கெடுப்பு மூலம் தேசிய மக்கள் சக்தியினர் கோரிய நிலையில் சட்டதிட்டங்களின் பிரகாரம் அதனைச் செய்ய முடியாது என உள்ளூராட்சி ஆணையாளரால் நிராகரிக்கப்பட்டது.

அதையடுத்து இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஆகியன பகிரங்க வாக்கெடுப்பையும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, தேசிய மக்கள் சக்தி ஆகியன இரகசிய வாக்கெடுப்பையும் கோரின. அதன்படி பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையில் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

தவிசாளர் பதவிக்காக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் போட்டியிட்ட தியாகராஜா நிரோஷ் 16 வாக்குகளையும், இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட செல்வத்திசைநாயகம் தவநாயகம் 11 வாக்குகளையும், தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட சிவசுப்பிரமணியம் சுகிர்தரூபன் 9

வாக்குகளையும் பெற்றனர். ஒரு வாக்கு செல்லுபடியற்ற வாக்காகப் பதியப்பட்டிருந்தது.

இந்நிலையில் முதலாவதாக வந்தவரை விட ஏனைய இருவர்களின் வாக்குகளின் கூட்டுத் தொகை அதிகமாகக் காணப்பட்டதால் மூன்றாவதாக வந்த தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் சுகிர்தரூபன் போட்டியில் இருந்து நீக்கப்பட்டு ஏனைய இருவருக்கும் இரண்டாம் சுற்று வாக்கெடுப்பு நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

அதன்போது தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்களில் ஒருவரைத் தவிர ஏனைய 8 உறுப்பினர்களும் பங்கேற்காது நடுநிலை வகிக்க இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் செல்வத்திசைநாயகம் தவநாயகமும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் தியாகராஜா நிரோ/ம் மீண்டும் இரண்டாம் சுற்றில் களமிறங்கினர்.

அதையடுத்து தவிசாளருக்கான வாக்கெடுப்பு பகிரங்க வாக்கெடுப்பா அல்லது இரகசிய வாக்கெடுப்பா என உள்ளூராட்சி ஆணையாளரால் கோரப்பட்டபோது பகிரங்க வாக்கெடுப்புக்கும் இரகசிய வாக்கெடுப்புக்கும் சரிசமமாக14 வாக்குகள் கிடைத்ததால் திருவுளச்சீட்டின் பிரகாரம் இரகசிய வாக்கெடுப்பை நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. குறித்த வாக்கெடுப்பில் ஜனநாயகத் தமிழ்த்தேசியக்கூட்டணிசார்பில்போட்டியிட்ட தியாகராஜா நிரோஷ் 16 வாக்குகளையும், இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட செல்வத்திசைநாயகம் தவநாயகம் 11 வாக்குகளையும் பெற்றனர்.

இதன்படி தவிசாளராக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியைச் சேர்ந்த தியாகராஜா நிரோஷ் தெரிவானார். உப தவிசாளராக அகில இலங்கைத்தமிழ்க் காங்கிரஸைச் சேர்ந்த தர்மலிங்கம் ஜனார்த்தனன் தெரிவானார். வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் கடந்த தடவையும் தவிசாளராகத் தியாகராஜா நிரோஷ் பதவி வகித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## காலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கெஹலிய ரம்புக்வெல, அவரது மனைவி மற்றும் மகள் ஆகியோரைப் பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் இன்று மாலை உத்தரவிட்டுள்ளது.

வாக்குமூலம் வழங்குவதற்காக கெஹலிய ரம்புக்வெல குடும்பத்தினர் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் இன்று காலை முன்னிலையாகிய போது இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் இன்று மாலை கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது பிணையில் விடுவிக்குமாறு உத்தரவிடப்பட்டது.

## யாழில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நரித்தமான அரசியல் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்படுகின்றது." - என்று அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பில் நாங்கள் யாருடனும் கூட்டுச் சேரவில்லை. எங்களுக்கான ஆதரவு வழங்கப்பட்டு வருகின்றது.

முள்ளிவாய்க்கால் பேரவலத்தை அரங்கேற்றிய தரப்புகளுடன் சேர்ந்துகொண்டு - அந்த அழிவை ஆதரித்த டக்ளஸ் தேவானந்தா போன்றவர்களுடன் இணைந்து ஆட்சியமைக்கும் நரித்தமான அரசியலை நடத்தும் நபர்களாக சிலர் மாறியுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சஜித் அணி தொடர்பில் கடந்த காலங்களில் பாரிய விமர்சனங்களை முன்வைத்தவர்கள், அவர்களுடன் சேர்ந்து தமது அரசியலை முன்னெடுக்கும் கேவலமான நிலை உள்ளது. இப்படியானவர்களே எமக்கு எதிராகப் போலியான பிரச்சாரத்தை தமிழ் மக்கள் மத்தியில் கொண்டு செல்கின்றனர்." - என்றார்.

## இதுவரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மண்டைதீவு மனிதப் புதைகுழி உட்பட வடக்கில் உள்ள பல மனிதப் புதைகுழிகள் குறித்து வெளியிடப்பட்ட தகவல்கள் வதந்திகளை அடிப்படையாகக் கொண்டவை என்றும், சரியான தகவல்கள் இல்லாமல் அரசு இவற்றின் மீது நடவடிக்கை எடுக்கத் தயாராக இல்லை என்றும் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார நேற்று தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் இன்று கருத்துரைக்கும்போதே கயந்த கருணாதிலக எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"போர்க் காலத்திலும் சரி, போர் நிறைவுக்கு வந்த பின்னரும் வடக்கில் பல மனிதப் புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டுத் தோண்டப்பட்டன. தற்போது யாழ்ப்பாணத்திலும் ஒரு மனிதப் புதைகுழி அடையாளம் காணப்பட்டு நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய தோண்டப்பட்டு வருகின்றன. ஆனால், போர் நடைபெற்ற காலத்தில் அடையாளம் காணப்பட்ட செம்மணிப் புதைகுழி தவிர வேறு எந்தப் புதைகுழி தொடர்பிலும் வடக்கு மக்களுக்கு நீதி கிடைக்கவில்லை.

இந்நிலையில், வடக்கில் பல மனிதப் புதைகுழிகள் வதந்திகள் என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளமையைக் கடுமையாகக் கண்டிக்கின்றோம். அவர் இதுவரை காலமும் தூக்கத்தில் இருந்தாரா? நீதி அமைச்சர் என்ற பதவி நிலையை மறந்து அவர் பொறுப்பற்ற விதத்தில் கருத்துத் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தனது அமைச்சரவையில் உள்ள அமைச்சர்கள் தொடர்பில் மீள்பரிசீலனை செய்ய வேண்டும்." - என்றார்.

# பாடசாலை மாணவி மீது பாலியல் சேட்டையில் ஈடுபட்ட இராணுவ சிப்பாய் கைது!

மன்னார் பகுதியில் பேருந்தில் பயணித்த பாடசாலை மாணவி மீது பாலியல் சேட்டையில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பில் இராணுவ சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் மடு பிரதேசத்தில் இருந்து முருங்கன் பகுதி நோக்கி இன்று காலை பயணித்து கொண்டிருந்த அரச பேருந்தில் பயணித்துக் கொண்டிருந்த பாடசாலை மாணவி மீது அப் பேருந்தில் பயணித்த இராணுவ சிப்பாய் ஒருவர் பாலியல் சேட்டை புரிந்துள்ளார்.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவி, முருங்கன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளார்.

அளிக்கப்பட்ட குறைபாட்டுக்கு அமைவாக முருங்கன் பொலிஸார் குறித்த இராணுவ சிப்பாயை கைது செய்துள்ளனர். சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை முருங்கன் பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஓட்டோ விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

திருகோணமலை, ஜூன் 18

திருகோணமலை, நிலாவெளி பகுதியில் இன்று இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் ஓட்டோவில் பயணித்த திரியாயைச் சேர்ந்த சமூகச் செயற்பாட்டாளர் மாணிக்கம் நடராசா மரணமடைந்துள்ளதுடன் அவரது மனைவி பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் திருகோணமலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

திரியாய் காணி மீட்புப் போராட்டத்தில் தன்னையும் ஈடுபடுத்தி பல செயற்பாடுகளில் இவர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# என்.பி.பி. வசமானது நுவரெலியா மாநகரம்

நுவரெலியா, ஜூன் 18

நுவரெலியா மாநகர சபையில் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்துள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் உபாலி வனிகசேகர, பகிரங்க வாக்கெடுப்பு மூலம் மாநகர சபையின் புதிய மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்,

அதேநேரத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினர் சிவன்ஜோதி யோகராஜா சபையின் துணை மேயராகத் தெரிவு செய்யப்பட்டார்.

மேயர் மற்றும் துணை மேயர் ஆகிய தெரிவுகள் மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் ஏ.எம்.கே.பி.கே. சமிலா அத்தபத்து தலைமையில் இடம்பெற்றது.

இதில் தேசிய மக்கள் சக்தி சார்பாக உபாலி வனிகசேகர, சுயேச்சைக் குழு சார்பாக அஹகம இராமநாயகலாகே அஜித் குமார ஆகியோர் மேயர் பதவிக்குப் போட்டியிட்டனர்.

இதில் பகிரங்க வாக்கெடுப்புக்கு 14 வாக்குகள் கிடைக்கப் பெற்றதால், பகிரங்க வாக்கெடுப்பு இடம்பெற்றது. இதில் 14 வாக்குகளைப் பெற்று சபையின் மேயராக தேசிய மக்கள் சக்தி சார்பாகப் போட்டியிட்ட உபாலி வனிகசேகர தெரிவு செய்யப்பட்டார்.

எதிராகப் போட்டியிட்ட சுயேச்சைக் குழு உறுப்பினர் அஹகம இராமநாயகலாகே அஜித் குமார 11 வாக்குகளே பெற்றுக்கொண்டார்.

இந்த மாநகர சபைக்குத் துணை மேயரைத் தெரிவு செய்வதற்காக ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் வீரமலை இளையராஜாவும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் சிவன்ஜோதி யோகராஜாவும் போட்டியிட்டனர்.

இதில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பாகப் போட்டியிட்ட சிவன்ஜோதி யோகராஜா 14 வாக்குகளைப் பெற்று துணை மேயராகத் தெரிவானர். இவருக்கு எதிராகப் போட்டியிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் வீரமலை இளையராஜா 11 வாக்குகளே பெற்றுக்கொண்டார்.

நுவரெலியா மாநகர சபை 25 உறுப்பினர்களைக் கொண்டது.

தேசிய மக்கள் சக்தி -12
ஐக்கிய மக்கள் சக்தி - 04
ஐக்கிய தேசியக் கட்சி - 03
சுயேச்சைக் குழு -03
இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் - 02
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன - 01







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.06.2025 வெளியிடப்பெற்றது.